ஓலை 46 | ஓசை 161 | துலை(அக்டோபர்) 2023

# அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே!
முதலும் தமிழே!!



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**நுண்மாண் நுழைபுல மில்லான் எழினலம்**
**மண்மாண் புனைபாவை யற்று.**

நுண்ணிய, சிறந்த பல நூல்களிலும் நுழைந்த அறிவு இல்லாதவனின் உடல் வளர்ச்சியும் அழகும், மண்ணால் சிறப்பாகச் செய்யப்பட்ட பொம்மையின் அழகு போன்றதாகும்.

**Translation:**

Who lack the power of subtle, large,
and penetrating sense,
Like puppet, decked with ornaments of clay,
their beauty's vain pretence.

**Explanation:**

The beauty and goodness of one who is destitute of knowledge by the study of great and exquisite works, is like (the beauty and goodness) of a painted earthen doll.


/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல
## இலக்கியப் பேரவை

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்

சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்


### அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,

மயிலாடுதுறை - 609001

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# ஔவையார் மூதுரை

## கல்லாதவன் காட்டுமரம் போன்றவன்
## பா வகை :குறட்டாழிசை.

அறிவினை விரிவுசெய் ஆற்றலும் இல்லையேல்
முறியுமே மதிப்பும் முனைந்து

கல்லாத மாந்தன் காட்டுமரம் தானன்றோ
கல்வியே துணையென காண்

படியென கல்வி பாங்காய் உயர்த்தும்
படித்திடா மூடனோ பாழ்

ஏழாம் அறிவின் எழில்மிகு சுடராய்
வீழாது கல்வி விந்தை

நாளைய உலகின் நயன்மை வழிகாட்டி
தோளிலே கல்வி துலங்கு

கல்வியின் தேவை கற்றிடப் பெருகும்
நல்லவை விதைத்திட நாடு




கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

அகர முதல

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# புன்னகை

## ஹைக்கூ

வறுமைக்கோடு
விடாமல் துரத்துகிறது
புன்னகை

## மணிக்கூ

கார்கால மின்னல்
கண்களில் தெரிகிறது
புன்னகை

## விடுகவிக்கூ

விலையில்லா முகப்பூச்சு
விலைமதிப்பற்றது
புன்னகை

## லிமரைக்கூ

என் புன்னகைக்கு காரணம்
அனைவரும் கேட்டனர்
புன்னகைக்க காரணம்

## எதுகைக்கூ

ஓடிய கால்கள்
வாடியபின் வருத்துகிறது
தேடிய புன்னகை

## மோனைக்கூ

காலம் தாண்டி
கரைந்து போகிறது
கடைசிப் புன்னகை

## சென்றியு

போகும் வியாதி
பிரதிபலன் பார்த்து வருகிறது
புன்னகை



## பழமொன்றியு

அகத்தின் அழகு
முகத்தில் தெரியும்
கண்ணாடி அறியா
கண்களுக்கு புரியும்

## லிமரிக்

மேக நிற வண்ணம்
ஒட்டிப்போன கண்ணம்
செங்கூந்தல்
உடை கந்தல்
மாறா புன்னகை திண்ணம்

## குக்கூ

இடம் பொருள்
ஏவல் பார்த்து
வார்த்தைகள் இல்லா
கள்ளம் கபடம் அற்ற
பலரின் புன்னகை
சத்தமாக மௌனிக்கிறது
நாகரிக பாதையில்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன்,ஈரோடு

# உனக்குள் கடவுள்

உலகைக் கற்று உன்னை உணர
கலகம் தவிர்த்து காவியம் படைக்க
திறமை கொண்டு திசைகள் மீட்ட
வறுமை தொலைத்து வாழ்வைக் கூட்ட
கருணையை மனதில் நாளும் நிறைத்து
தருணம் யாவிலும் தன்னை உயிர்ப்பித்து
இனத்தின் பின்னே இதயத்தைத் தொலைக்காது
சனத்தைக் காக்கும் சரித்திரம் எழுதி
மதத்தின் மீதான மோகத்தைத் துறந்து
இதயத்தில் அன்பைப் பெருக்கும் வழியில்
மக்களின் உழைப்பை மதிக்கும் பண்பில்
எக்கணமும் அஞ்சாமல் ஈரப் பார்வையில்
மனிதத்தை விதைக்கும் மாண்புகள் சேர்த்து
புனிதச் செயல்களில் புண்ணியம் கூட்டி
காணும் உயிர்களிடத்து கருணையை விதைத்து
பேணும் நட்பில் நிமிரும் தோழமையில்
இன்பத்தை வாழ்வில் எப்போதும் வளர்த்தி
துன்பத்தின் தருணத்தில் தைரியம் நீட்டி
உன்னை அறிந்தே நன்மை செய்திடின்
உனக்குள் கடவுள் ஒளிர்வதை உணர்வாய்.



கவிஞர் இளையவன் சிவா,நரசிங்காபுரம்

# கற்றல் இனிமை

பல்கலைப் பேராசிரியன் அவன்
மேலாண்மையில் முனைவர்
இளம் வயதில் இமயம் தொட்டவன்
மாணவர்களிடத்து கதாநாயகன்

மாணவிகளுக்கு கிரஷ்
மாணவர்களுக்கு ஜெலஸ்
தேசம் முழுவதும் பிரபலம்
கருத்தரங்கு பயிலரங்கு அவனின்றி இராது


சகதர்மிணிக்கு வங்கியில் வேலை
இவன் புத்திசாலி! முன் கோபி!
நடத்துவது நேர மேலாண்மை
போதிப்பது கோப மேலாண்மை

அவள் ஒரு புன்னகையில் வழிநடத்துவாள்
இவன் போதிப்பது எதையும் பின்பற்றாதவன்
கோபமும் பதட்டமும் உச்சம்
இடத்தை தக்க வைக்கும் அச்சம்

கணவன் மனைவி இருவருக்கும்
வாகனத்தை மாற்ற வாதம் விவாதம்
எதற்கு வீண் செலவு அவள்?
ஆடி கார் வாங்கினாலே ஆச்சு அவன்

ஐந்து வயது பாலகன் அப்பா பக்கம்
அப்பா ஆடி கார் வாங்கலாம்.
மழலை சொல் மனதை மயக்கும்
அன்று மனைவியை சர்ப்ரைஸ் செய்ய
வாசலில் நிறுத்தினான்

ஆவலுடன் அவளைத் தேடி வீட்டுக்குள் நுழைந்து
கண்ணை மூடி வாசலுக்கு அழைத்த வர
அதிர்ச்சியில் உறைந்தான்
அவளோ ஆவலில் மலர்ந்தாள்! வாவ் நைஸ்!



காதில் விழவில்லை கண்கள் கண்ட காட்சி
கண் மண் தெரியவில்லை
அன்பு மகன் ஆனியால் கிறுக்கி கொண்டிருந்தான்.

ஓங்கி ஒரே அறை
பேச்சு மூச்சற்று விழுந்தது குழந்தை
திக் பிரமையில் செயலிழந்தாள் மனைவி
ஒரு நொடியில் பூகம்பம்

ஆம்புலன்ஸ்! ஆஸ்பத்திரி
பரபரப்பு மருத்துவர்கள்
நல்ல வேளை செவித்திறன் பாதிக்க வில்லை
குழந்தையை இப்படியா அடிப்பீர்கள்?

வெட்கித் தலை குனிந்தான்
கண்ணீர் சொறிந்தான்
மூன்று நாள் மருத்துவமனை வாசம்
ஆடி கார் சந்தோஷம் ஆடிக்காற்றில்

வந்தவன் காரருகே நிதானித்தான்
கிறுக்கலை கூர்ந்து கவனித்தான்
ஐ லவ் யூ டாடி!
யூ ஆர் தி பெஸ்ட் டாடி
கீறல்கள் நெஞ்சில் விழுந்தன.

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு,திருச்சி

# தூரத்தில் உயிர்மொட்டு



முன்னேற்ற மலர்கள்
பூத்துக் குலுங்கும்
அரபுதேச நந்தவனத்தில்
வேலை செய்யும் அப்பா
முகவரியைத் தேடியலைந்து
வியர்வை அருவியோடு
ஓடி வரும் சூரியனிடம்
மகளின் அன்போலை.

கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,துபாய்

# சிறகு வேண்டும்

விடிவெள்ளி முளைக்க
விடிந்தது வானம்.

புட்கள் யாவும்
பூபாளம் இசைத்தன.

அதற்குள் விடிந்ததா?
அவசரமாய் எழுந்தேன்.

காலையில் பாலைக்
காய்ச்சி வைத்தேன்.

சிற்றுண்டி செய்வதற்குள்
சின்னதாய்ச் சோம்பல்.

புறந்தள்ளி குளித்தே
புத்துணர்ச்சி பெற்றேன்.

பணியிடம் நோக்கி
பாங்காய் விரைந்தேன்.

பேருந்து நிறுத்தத்தில்
பெருமளவு கூட்டம்.

முதலில் இளையோர்
முந்தி ஏறினர்.

முதுபெண்டிர் ஏறும்
முன் கிளம்பிட

வாட்டத்துடன் நின்றோரை
வாஞ்சையாய்ப் பார்த்தேன்.

நான் ஏறும் பேருந்து
நாடி வந்ததும்

ஓடி ஏறினேன்
ஓரமாய் நின்றேன்.

முட்டி முட்டி தள்ளவே
முனகலோடு நகர்ந்தேன்.

பயணச்சீட்டு வாங்கியே
பயணித்து இறங்கினேன்.

பணியிடத்துள் நுழைந்தே
பாங்காய்ப் பதிவேட்டில்

காலத்தில் வந்ததைக்
கணக்காய்க் குறிக்குமுன்

பதிவேடு உள்ளேக
பரிதவித்தே வருந்தினேன்.

வானத்து தேவதையே
வாகாய்ப் பறக்க

உனைப்போல் சிறகு
உடனே ஈந்திடு எனக்கும்.



கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# புதுக்கவிதைப் பூக்கள்

இரவின் நிறம்
இருட்டாக இருந்தாலும்
அதனிடமில்லை ஒளிவு மறைவு.

மலரோடு பேசிவிட்டு
கொஞ்ச நேரம் இலை மீதும்
அமர்ந்து கொள்கிறது வண்ணத்துப்பூச்சி.

செதுக்கச் செதுக்க
மெருகேறுகிறது
எப்போதோ எழுதிய கவிதை.



காற்றில் நகரும் சருகுகள்
நிலத்தோடு பேசிக் கொள்ளும்
சலசலப்பு.

இதயத்திலிருந்து
இறக்கிவிடு
உன்னோடு நடந்து வருகிறேன்.

பெருந்திரளான கூட்டத்திலும்
என்னை மட்டும் தனிமைப்படுத்தி
அழைக்கிறது என்னவளின் விழிகள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

அகர முதல

அகர முதல இலக்கிய பேரவை
Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# மடி இன்மை

## அதிகாரம் : 61




நற்குடியெனும் மங்காவிளக்கு
மடியெனும் சோம்பலால்.
மாசுபடர்ந்து ஒளிமங்கி
கெடுமாம் ஒருவர்க்கு.

தன்குடியது நற்சிறக்க
விழைகின்ற ஒருவன்.
தனக்கான சோம்பலழித்து
முயற்சியாளனாய் திகழ்தல்நலம்.

தன்னழிக்கும் சோம்பலை
தன்னகத்தேகொளும் அறிவிலான்.
தன்குடிப்பெருமை அறியும்முன்
அக்குடியே அழிந்துபோம்.

முயற்சிமறந்து சோம்பலாழ்ந்து
வாழ்வோரின் குடிப்பெருமை.
நாள்தோறும் கெட்டழிந்து
குற்றமும் பெருகியோங்கும்.

காலந்தாழ்த்தல் மறதியொடு
சோம்பலுறக்கம் இந்நான்கும்.
அழிந்துபோவோர் விரும்பிஏறும்
அகன்ற மரக்கலமாம்.

நாடாளும் மன்னன்வந்து
தன்னோடு இணைந்தாலும்.
தன்கெடுக்கும் சோர்வுடையோனுக்கு
பயன்கிடைக்கப் பெறாதாம்.

சோம்பல்விரும்பி முயற்சிமறந்து
வாழ்வோர் பிறரால்.
இடித்துக்கூறும் இடிசொற்களை
ஏராளம் கேட்டுநோகுவர்.

நற்குடியில் பிறந்தோனிடம்
சோம்பல்வந்து சேருமானால்.
அஃதவனை பகைவர்க்கு
சடுதியில் அடிமையாக்கும்.

ஆணழிக்கும் சோம்பலொழிக்க
ஒருவனால் கூடுமாயின்.
அவன்குடியின் குற்றங்கள்
ஆங்கிருந்தே நீங்கிவிடும்.

திருவடியால் தாவித்தாவி
திருமால் அளந்தநிலமெலாம்.
சுறுசுறுப்பால் ஒருவன்
ஒருசேரப் பெற்றிடுவான்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# சென்றுவா மகளே!

மகளே நீ பிரியாதே
உனக்குள்ளே நான் வாழ்கிறேன்
உன் பிரிவை நினைத்தாலே
என் கண்களில் நீரூற்றுகள்
தினமும் உன்னைப்பார்த்த என்னிரு விழிகள்
இனிமேல் ஏங்கி தவிக்குமே
தினம் உன்குரல் கேட்ட என்னிரு செவிகள்
மீண்டும் கேட்க துடிக்குமே
உன் பிரிவை நினைக்கும் போதிலே
மனம் தொலைந்து போகுதே
உன் பிரிவு வேண்டாம் என்று
ஒவ்வொரு நொடியும் கூறுதே
என்ன சொல்லி என் மனதை
நான் ஆறுதல் செய்வது
உன் பிரிவை நினைக்கையில்
மனம் உடைந்து போகுது
கண்களில் நீரூற்றை ஏந்தி
மனதினில் பெரும் காயத்தை தாங்கி
முகத்திலே போலி சிரிப்புடன்
உன்னை வழி அனுப்புகிறேன்
சென்று வா மகளே!



கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் (இலங்கை)

# மனம் தளரா நெஞ்சே

நோமென் நெஞ்சே நோமென் நெஞ்சே
இன்னல் கண்டு மனமே தளராதே
அடிஉரம் இன்றி செடியும் வளராதே
துன்பம் கண்டு துவண்டு விடாதே
இன்பத்திற்கு ஏற்றும் படிக்கல்லாய் ஆக்கிடு
மின்னல் இல்லாத வானமும் இல்லை
இன்னல்கள் இல்லாத வாழ்க்கையும் இல்லை
சவால்களை சமாளித்தல் நமக்கு அழகு
இன்னல்களை இனிதே கையாளப் பழகு
நமக்குள் எத்தனை ஆற்றல் உண்டு
தெளிந்த மனதிற்கு தேறுதல் உண்டு
தெய்வத்தால் ஆகாது போனாலும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தருவது மெய்யே
துன்பம் கண்டு என்றும் தாழேன்
இன்னல் மேலேறி இனிதே வாழ்வேன்
துளை உள்ள மூங்கிலே இசைக்கும் புல்லாங்குழல்



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# புன்னகை

சிலருக்கோ தீரா வலி
மறைக்கும் முகமூடி;

சிலருக்கோ சொல்லொணா
மகிழ்ச்சியின் உச்சம்;

சிலருக்கோ சிதைந்து போன
இதயத்தின் சீற்றம்;

சிலருக்கோ உறைந்து போன
ஆத்மார்த்தத்தின் அதீதம்;

சிலருக்கோ அகோர
அச்சத்தின் அடைக்கலம்;

சிலருக்கோ ஒட்டிக் கொண்ட
நாணத்தின் ஆபரணம்;

சிலருக்கோ கோபம்
அடக்கும் பேராயுதம்;

சிலருக்கோ அத்துமீறிய
பொறுமையின் போர்க்களம்;

இன்னும் சிலருக்கோ
மீதமிருக்கும் வாழ்வை
கடத்திட உதவும்
பாதை வழித் துணை.

அது தான் "புன்னகை"



கவிஞர் பாத்திமா ஹகீமா அமீனுதீன்,ஓட்டமாவடி

# வாழ்வியல்

தகுதியற்ற ஒன்றை தேடியோ,
நினைவுகொண்டோ நேரத்தை வீணாக்காதே.

உனக்காக காத்திருக்கும் பொக்கிஷயத்தை
சரியான முறையில் ஏற்றுக்கொள்.
அதுவே வாழ்வியல்.



கவிஞர் அ.பழனி,ஒ.தண்டரை

# நேசம் என்பது

நேசம் என்பது
விட்டுக்கொடுத்தல்

நேசம் என்பது
இறகால் நீவி விடல்

நேசம் என்பது
சிறகுகள் தருதல்

நேசம் என்பது
தூய்மையின் ஈரம்

நேசம் என்பது
கொண்டாடுதலின் பூக்கள்

நேசம் என்பது
சுவடுகளைப் பத்திரப்படுத்துதல்

நேசம் என்பது
ஆன்மாவை ஆட்டும் மெல்லிசை

வெற்றி என்ற சொல்லுக்கு
இடமே இல்லை நேசத்தில்!




கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# அணிலாடு முன்றில்

பண்டைய கால நிகழ்வுகள் மறைந்தன
பண்பாடு எல்லாம் மாறி போனது

இயற்கையான வாழ்வை எல்லாம் விட்டு
செயற்கையை நாடி செல்ல வேண்டியது

அலைபேசி வந்தது உறவுகள் போயின
தொலைபேசி தொல்லை பேசியாய் மாறியது

திண்ணையில் விளையாடிய நாள் மாறி
பண்ணை வீட்டுக்கு செல்ல துடிக்கிறோம்

நாகரீக உடைகள் எல்லாம் இருக்க
அநாகரீக உடைகளை தேடி செல்கிறோம்



ஆற்றில் விளையாடிய நாட்கள் நகர்ந்து
காற்றை தேடி போய் வாங்குகிறோம்

தேர்வு விடுமுறையில் ஊருக்கு சென்று
தேர் திருவிழா பார்க்க போகிறோம்

நல்ல நண்பர்களோடு பயணம் செய்து
நல்லவற்றை தேடி எடுத்து படிப்போம்

கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# நினைவுகளின் காதல்

உன் நினைவுகள் எல்லாம்
என்னை எப்போதாவது
ஒருமுறையாவது குழந்தையைப் போல
தேம்பி தேம்பி அழுதிட வைக்கின்றது.
என் மனதைக் கூட அடக்கிவிட முயன்று
தோற்றுப் போகின்றேன்.
என்னைப் போல உனக்கும்
நினைவுகளின் நிழல்கள் அங்குமிங்கும்
அலைந்திடும் என்றே நினைக்கின்றேன்.
நிழல்களை எல்லாம் எளிதாய்
கடந்து சென்று விடுகின்றாய்.
இங்கே நானோ அவைகளோடு எப்போதாவது
ஒருமுறையாவது மீண்டும் சண்டையிடுகின்றேன்.
சமாதானமாகின்றேன்.
அன்பினால் நனைகின்றேன்.
ஆறுதலாய் அணைக்கின்றேன்.
மீண்டும் கண்ணீர் வடிக்கின்றேன்.
இப்படியே சுற்றுகின்றது
இந்த வார்த்தைகளும்
அதில் வாழும் வாழ்க்கையுமே!



கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை

# பணம்


நீ கூடுதல் ஆகிவிட்டாலோ
கூடிவிடும் அகந்தை,அலட்சியம்
நீ குறைவாக இருந்திட்டாலோ
குறைந்தே போகும் மரியாதை
உன் அளவை வைத்தே
உறவுகளும் நிலைத்திடும்
உனக்கிணை நீ மட்டுமே
பலசரக்கு கடைசென்று
பலபொருள் வாங்கிவிட்டு
பணம்தான் வாழ்வா என்றிட
பல் உடைபட்டு கையிலாகும்
பத்தும் செய்திடும் நீ ஏழை
பசி தீர்க்க வாராயோ?
பாதளம் பாயும் வழியில்
பாவப்பட்டவர் வீட்டினை
எட்டியேனும் பார்த்திடுவாயோ?
பணம் தங்கி செழித்திட
பரிகாரம் பலர் சொன்னர்
மங்களமான பொருளினை
மனையின் வாசலில் வைத்திட
மனையடி சாத்திரமில்லை
மந்திரவாத பூசையுமில்லை
மலையாய் குடுவைகள் வாசலில்.
மக்கள் குடிகெடுத்திடும்
மதுபானக் கடைகளிலோ
மழையாய் பொழிவதுமேனோ?
முரணாய் இருக்கிறதே உன் போக்கு!



கவிஞர் ஷீலாதேவி அருணாசலம்,நாகர்கோவில்

# யோகி

இறைவழியே இறுதிவரை
இம்மைக்கும் மறுமைக்கும்
ஏற்றம் தரும் என்றுணர்ந்து
எல்லா நாளும்
இடைவெளியின்றி
இறையுடன்
இணைந்து நடந்தால்
ஆவான் யோகி!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# நிலவே முகம் காட்டு

பாதி வழியில்
மறைந்து போவதேனோ

தூரத்தே உனைக்
காண தூவானமாகிறேன்

என் நெஞ்சம்
நனைந்து குளிர்கிறேன்

கடல்கடந்து கண்களால்
கணை தொடுக்கிறாய்

காதோரம் கதைகூற
கண் மூடுகிறேன்

காலக் குறுகலில்
கனவு காண்கிறேன்

வாழ்வின் நெடுகலில்
உனைத் தேடுகிறேன்

ஊசி முனையில்
நானும் வாழ்கிறேன்

மறுநிமிட மரணத்திற்காய்
நாள் எண்ணுகிறேன்

நான் மாளுமுன்
நிலவே முகங்காட்டு



கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# தூரம் அதிகமில்லை

வாழ்க்கை பயணம்
வாழ்நாளில் புதியபாதைகள்
சுமக்கும் சுமைகள்
சுகமான ருசியோடு

கழுகுப் பார்வையில்
கன தூரமானாலும்
அன்பின் விதைகள்
அள்ளி விதைப்போம்



பிடியளவு மனதில்
பிடிவாதம் எதற்கு?
பின்வாங்கும் எண்ணமோ
பிந்திவிடச் செய்யாதோ?

விருட்சங்கள் எங்கும்
விரிவாய் வளரட்டும்
வாழ்க்கையை இன்னும்
புன்னகையுடன் கடப்போம்

தொட்டு விடும் தூரம் தான்
வெற்றிக் கனிகள்
விமரிசையுடனே பயணிப்போம்.
தூரம் அதிகமில்லை

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# காத்திருப்பு



காதலில் காத்திருப்பும் சுகமே
காதலியோ,காதலனோ
காதலிக்க ஒப்பும்வரை
காதல் சம்மதம் வந்தபிறகு
காலம் கழிப்பது மிகவும் சுமையே
காலை,மாலை யிரு வேளையும்
காணாவிடில் கண்ஏங்குமே
கானமும் மௌனராகமாகுமே
காணுமிடமும் காட்சி தெரியாதே
காதலராகவே தெரிந்திடுமே
காண்பவரையும் மதியிழந்தவராக்குமே
காடுமேடாய் அலையசெய்திடுமே
காவியமெழுத சொல்லிடுமே
காட்சிப்பொருளும் கவித்துவமாகுமே
காலும் சக்கரமாய் சுற்றிடுமே
காதுகளில் தென்றலும் கீதமிசைத்திடுமே
கார்மேகமும் கதைபேசிடுமே
காலியானயிடமெங்கும் கழனியாகுமே
காத்திருப்பதும்,காத்திருக்கவைப்பதும்
காதலிலே காலமெல்லாம் சுமந்திடும்
காத்திருப்பதும் சுகமாகுமே!

கவிஞர் நீலாசுபாஷ்,ஆக்கூர்

# சிலப்பதிகாரம் (பன்னிரண்டு)

மதுரைக் காண்டம். II .காடுகாண் காதை.

1.உறையூரில் நிகழ்ந்தவை :
ஒரு காலத்தில் இங்கு யானையும் கோழியும் போரிட்டன
வருங்காலத்தில் உரையூருக்கு "கோழியூர்" பெயரானது
இருவரும் அடிகள் துணையுடன் உரையூர் வந்தனர்
அருகில் உள்ள சோலையில் தங்கி விடியலில் புறப்பட்டனர்

தென்திசையில் சென்று திருவரங்கம் வந்து சேர்ந்தார்கள்
அன்புடன் அந்தணன் ஒருவனுடன் மண்டபத்தில் தங்கினர்
இன்முகத்துடன் பாண்டிய மன்னனைப் புகழ்ந்துரைத்தான்
"என்னாளில் மன்னனின் வீரம் இது போல் வேறு கண்டிலன்"

"அவன் வேலின் திறங்கண்டு பகைவர் அஞ்சி ஒடுங்கினர்
தவமான பஃறுளி ஆறு குமரி மலைகளில் பாய்ந்தோட
இவன் தென்திசையில் படையெடுத்து செல்ல முடியவில்லை
வடதிசை நோக்கிப் படையெடுத்து கங்கை இமயம் வென்றான்"

"மேகங்களின் தலைவன் சினங்கொண்டு மழை பொழியவில்லை
சுகமாக பயிர்த்தொழிலுக்கு நீர் இன்றி மக்கள்வாடக் கண்டான்
வேகமாக கலைந்து சென்ற மேகங்களை சிறை பிடித்த மன்னன்
பகல் இரவு பாராமல் மழை வளம் உண்டாக்கி பஞ்சம் தவிர்த்தான்"

2. கோவலனும் அந்தணனும் :
அந்தணன் கூறியதைக் கேட்ட கோவலன்,"தாங்கள் யார்?"
இந்த ஊருக்கு வந்ததன் நோக்கம் என்ன? என்று வினவினான்
"வந்த காரணம், திருவரங்கத்தில் திருமாலைக் தரிசித்து
மந்தகாசமான வடவேங்கட நாதன் எழிலைக் காணவந்தேன்"

3. மதுரைக்குச் செல்லும் வழி அறிதல் :
பதில் கேட்டு மகிழ்ந்த கோவலன் மதுரைக்குப் போகும் வழி யாது?
சேதி அறிந்த மறையோன் தெரிந்த மூன்று வழிகள் என்ன? கூறினான்
அதில் வலது இடது பாதை கரடு முரடானது வற்றிய ஆறு. மலை கடக்கனும்
நடுப் பாதை வளமான வயல், சோலைகள் அடுத்து மதுரை நகரம்

4. இடது பக்கப் பாதையை விரித்துக் கூறுதல் :
இடமாக சென்றால் அழகர்மலை, திருமாலிருஞ்சோலை வரும்
நடந்து செல்ல குகையும் அதனுள் மூன்று திருக்குளங்கள் வரும்
கடந்து போக மலையும் அங்கு ஓடும் சிலம்பாற்றைக் காணலாம்
வடமலைமேல் இருக்கும் திருமாலை வணங்கிச் செல்லுங்கள்

5. மேலும் உரைத்தல் :
இப்பிறவி துன்பம் நீங்கி அக மகிழ்வுடன் பயணம் தொடரும்
இப்பாதையும் மலர் சோலைகள் சூழ்ந்த ஊர்கள் பல உள்ளன
எப்பொழுதும் நன்மை புரியும் வன தேவதை தரிசிக்கலாம்
இப்படி சென்றால் மதுரைக்குச் செல்லும் பாதை தெரியும்

6. கவுந்தியடிகள் மறுமொழி பகர்தல் :
மறக்க இயலாது தாங்கள் அருளிய மதுரைக்கான வழி முறைகள்
"இறந்த பிறப்பின் எய்திய எல்லாம் தொடர்ந்து வரும் வாழ்க்கை
பிறந்த பிறப்பின் காணா யோநீ இது சுழலும் சக்கரம் அல்லவா.
துறந்த யாம் இவர்களுக்கு துணை நின்று அழைத்துச் செல்வோம்"



...தொடரும்

கவிஞர் ந.திருக்காமு

# திருந்திடு மனிதா!

யுத்தங்கள் ஆயிரம் நடந்தும்
இன்னும் சித்தம் தெளியவில்லை

இயற்கைப் பேரிடர் தொடர்ந்தும்
இன்னும் இதயம் கசியவில்லை

வறுமைச் சுழியில் வீழ்ந்தும்
இன்னும் சுயநலம் அழியவில்லை

இன்னல்கள் வாழ்வில் வந்தும்
இன்னும் தலைக்கனம் குறையவில்லை

பொல்லாத் துயரில் உழன்றும்
இன்னும் பொறாமை ஓயவில்லை

துரோகத் தீயில் வெந்தும்
இன்னும் வாய்மையை உணரவில்லை

இத்தனை யுகங்கள் கடந்தும்
இன்னும் மனிதன் திருந்தவில்லை.



கவிஞர் மக்கொனையூராள்

# கூர்மையான ஆயுதம்

கரத்தில் தவழ்வது
காலத்தை வெல்வது
மறத்தைக் கொடுத்து
மகுடம் சூட்டுவது

ஆற்றலும் அறிவும்
ஆழமாய்த் தொடுப்பது
கற்றலின் தன்மையைக்
கல்வியாய் உதிர்ப்பது

சட்டத்தின் வேர்களை
சமமாய்க் களைவது
விட்டத்தில் ஏற்றிட
விஞ்ஞானியாய் மாற்றுவது



உண்மையை உடைத்து
உலகுக்குக் காட்டுவது
மண்ணின் மாண்பை
மகிமைப் படுத்துவது

பாமரனையும் பாராட்டி
பட்டத்தில் ஏற்றுவது
பாமாலை புனைந்து
பாடலாய் ஆக்குவது

நடக்கும் அவலத்தை
நாட்டுக்கு எடுத்துரைப்பது
தொடங்கும் கடிதத்தில்
பிள்ளையார் சுழிவைப்பது

உலகத்தின் கூர்மையான ஆயுதம்
உரத்தை விதைக்கும்
பலம் கொண்டவராய்
பலபேரை ஆக்கியது

சாதிக்க வைப்பது
சரித்திரம் படைப்பது
போதிக்க வைத்து
பொன்னறிவு புகட்டுவது

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# சூழல்

வறண்ட நிலம்
முத்தமிடும் மழை!

பச்சை ஒப்பனை
நாற்றங்கால் பயிர்!

மோனம் கலைந்த
மொட்டு!



காட்சி பிழை
கற்சிலை பதுமை!

கரை கடந்த
அலை நுரை!

நிழல் மறந்த
நிலவு!

கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு

# தன்முனையிசைப் கவிதைகள்

1
கருத்துள்ள பாட்டை
இசையோடு பாடு
பாடலைக் கேட்டு
அதற்கேற்ப ஆடு
2
வாழ்க்கையில் தினந்தோறும்
வந்துவிடும் மாற்றம்
உழைப்பினால் கிடைக்கும்
உன்னதமான ஏற்றம்
3
காலையில் பருகும் தேநீர்
சுறுசுறுப்பைத் தந்துவிடும்
தினந்தோறும் நடைப்பயிற்சி
திடமாக உடலைக் காத்திடும்
4
மலைகள் சூழ்ந்து அழகாய்
மாட்சிபெறும் எமது மலையகம்
வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும்
வளந்தரும் எமது தாயகம்
5
காலத்தே பயிர் செய்தால்
பலன் தரும் விளைச்சலாகும்
காலத்தைத் தவற விட்டால்
காலம் முழுதும் அலைச்சலாகும்
6
மூலிகை வகைகளில்
எத்தனையோ மகத்துவம்
பயனறிந்து பாவித்தால்
அவற்றிலிருக்கும் மருத்துவம்
7
முடியும் என்று தெரிந்தால்
எடுத்துக் கொள்வோம் முயற்சி
முடியாது என்று தெரிந்தால்
எடுத்துக் கொள்வோம் பயிற்சி



8
காக்கையின் கூட்டில்
முட்டையிடும் குயில்
முருகனின் கோவிலில்
குடியிருக்கும் மயில்
9
வட்டிக்கு வட்டி
புதிய முதலாகும்
வட்டிக் கொடுத்தவன்
வாழ்க்கை பாழாகும்
10
குளத்தில் அழகாய்
பூத்திருக்கும் ஆம்பல்
அழகை ரசித்தால்
அகலும் சோம்பல்
11
விறுவிறுப்பான நடை
வியக்க வைக்கும் இடை
சூழ்ந்திடும் இளைஞர் படை
சங்கத்தில் இவள் கடை
12
மரண வீட்டில் உறவுகள்
ஒன்று சேர்ந்து அழுதன
அடக்கம் முடிந்த உடன்
சொத்தைப் பிரித்துக் கொண்டன
13
வான் மழை என்றும்
வேற்றுமை இன்றி பொழியும்
வான் நிலா என்றும்
வீட்டு முற்றத்தை அழகாக்கும்

கவிஞர் சோ.ஸ்ரீதரன்,இலங்கை

# மீளுமோ மீட்டலில்

மேகத்தின் முத்தம்
மெல்லினக் கவிதையில்
அனுமதியின்றி
தொட்டு தொட்டுச்
சிதறலின் சிறு சங்கீதம்

மௌனத்தையே
சற்று சலனத்தில் தள்ளிடும்
எண்ணங்கள் புதுபுது
துளிருக்குள் புகுந்து
வந்த வாசலில் மறைந்திருந்து



மறுகரை விளிம்பில்
ஏற்க மறுத்தாயோ என
வம்படிக்குள்

துரிதங்கள் நிகழ்த்திடும்
மாற்றங்கள்
தளராது மீண்டும் மீண்டும்
மீட்டும் வீணைக்குள்
அழகின் துளிர் ஆசுவாசத்தில்
கூடு நின்று கண் சிமிட்டும்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# ஜன்னலுக்கு வெளியே

காலைநேர மழை
பொருந்தா ஜன்னலில்
பொருத்திய மனதுக்குள்
தாழிடப்படாது
சில்லென நனைக்கும்

நல்முத்தள்ளி தெளித்த
பனியிதழ் அரும்பு
படர்ந்தநல் இளங்காலை மணம்
இதோ வந்தேனென
இந்நாள் அழகுறும்

கழுத்து நீண்ட ஒட்டகம்
போன்று பகல் பொழுது
காதல் பித்தில் முத்தமிடுதோ
பிய்த்து தின்கிறதோ
கரையும் நிலவின் முகம்



கண்டவர் பிழையோ
காணும் காட்சிப் பிழையோ
திகுதிகுவென விடியும்
பகலவன் விடைதரும்!

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# அழகிய அந்தி; அவளுடன் நான்

கடற்கரை உரசிய அலைகள்
ஏளனம் செய்தது
ஆம் உதடு
உரசும் வேளையில் உரையாடல்எதற்கென!

உளறிச் சொன்னது போதுமடி
உள்ளத்து மொழியில் நூறுகதை
பேசி தீர்த்தோம் அறிவாயோ!

என்னவன் தழுவாத நொடிகளை
உனக்கு தருவேனாடி அலைப்பெண்ணே
இவள் மேலும் சீண்டி இதயம்!

பக்கத்தில் பூ
பார்த்து ரசிக்க நான்
உன்னால் முடியுமா
அலையே துரத்தினேன்!

கவிஞனே என்னைப்போல
உன்னவளை தொட்டுத்
தழுவ முடியுமாவென மீண்டும் சீண்டியது!

அழகிய அந்தி
அவளுடன் நான்
ஆங்காங்கே தலைகள்
சுற்றிலும் காலடித் தடங்கள்
ஆனாலும், அவளுடன் நான்

அவ்வளவு பொக்கிஷமாடா
கால் நனைக்க விடாமல்
தடுத்து விட்டாயடா
கோபித்துக்கொண்டாள் அலைமகள்



அவளுடன் நான்

கவிஞர் ஆர்.மோகன்ராஜ்



அகர முதல

# ஆழ்கடலின் ஆசை


நாமோ!
முத்து எடுக்க
ஆழ்கடலுக்குள் செல்கிறோம்
ஆனால்
ஆழ்கடலோ அலைகளாக
அவளின் பாதத்தில்
முத்தம் இட்டுச் செல்கிறது.



கவிஞர் முனைவர் க குமார்,சித்தாலிக்குப்பம்

# முதல் கனவே

முட்டி முட்டி நின்ற வார்த்தைகளை - இன்று
கொட்டி கொட்டி கொடுத்தாய்
தட்டி தட்டி நான் திறக்கும் போது
திட்டி திட்டி எனை முறைத்தாய்
எட்டி எட்டி நான் போகும்போது
கட்டி கட்டி எனை இழுத்தாய்
விட்டு விட்டு நீ போனால் கூட
சொட்டு சொட்டாய் உனை ரசிப்பேன்



கவிஞர் ச.நந்தினி

# வலி

ஆயிரம் டி எம் சி ஈரங்களை
விழிகளுக்குள் தேக்கி
அங்குமிங்குமாய்
மனதின் வலியோடும்
வேதனையோடும் சுற்றித் திரிகிறேன்

மறைவுகளெதுவுமின்றி
வெறிச்சோடிக் கிடக்கும் கிளைகளில் ஒரு நிமிட
ஆறுதலுக்குகூட அமராத சிறகுகளை
ஏக்கத்தோடு காண
இறகென்று விலகியே பயணித்துக் கொண்டேயிருக்கிறது

எங்காவது ஒரு மூலையில்
உதிர்ந்து கிடக்கும் ஓர் இறகு
துயரத்தின் பிடியிலிருந்து மீளாத இச்சிறு பறவைக்கு
சேயாகவோ தாயாகவோ
யாருமில்லாத அடர்வனமாகவோ
சற்று உருமாறினால் அம்மறைவில்
நானும் கொஞ்சம் அழுது தீர்த்துக்கொள்வேன்
தேங்கிக் கிடக்கும் வலியின் ஈரங்களை.



கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# வள்ளலார்

எத்தனையோ மகான்கள் இப்பூவுலகில்
வாழ்ந்தும் மறைந்தும் பல போத மார்க்கத்தை
கற்று தந்தும் அதை நெறிப்படுத்தியும் சென்றனரே.
5 - 10 - 1823 - ஆம் ஆண்டு பிறந்த நம் இராமலிங்க சுவாமியின்
தாயார் சின்னம்மையார் தகப்பனார் இராமையாப் பிள்ளை
இந்த அடிகளார் ஒரு ஆன்மீகவாதி.
இவர் சைவ சமயத்தை திருத்தி புதிய சிந்தனைகளை புகுத்தினார்.
இவர் இன்றளவும் இறக்கவில்லை என்று நம்பப்படுகிறது.
23 - 5 - 1867 அன்று வடலூர் மக்களிடமிருந்து
80 காணி நிலம் பெற்று பொது தர்மசாலை ஒன்றை நிறுவினார்.
மூன்று வேளையும், வந்தவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.
இவர் ஒரு எழுத்தாளர், சிறந்த பேச்சாளர், இவர் எழுதிய
6000 பாடல்கள் திருவருட்பாவாக தொகுக்கப்பட்டது.
இவரின் கொள்கைகள் கடவுள் ஒருவரே,
அவர் அருட்பெருஞ்ஜோதி எனப்படுவதாகும்.
புலால் தவிர். எந்த உயிரையும் கொல்லக்கூடாது.
சாதி, மதம், இனம், மொழி என்று வேறுபாடு கூடாது.
முற்போக்கு சிந்தனைகள் பலவற்றை
மக்களிடையே கொண்டு சென்றவர்.
வள்ளலாரின் அருட்பா தூய தமிழில்
மிகவும் எளிமையாக எழுதப்பட்டது.
பசிப்பிணி மிகவும் கொடியது.
"வாடிய பயிரை கண்டப் போதெல்லாம் வாடினேன்"
இது அவரின் தத்துவம்.
அவர் பசி இல்லாத நிலையை கொண்டு வர மிகவும் பாடுபட்டார்.
அவர் ஏற்றிய தீபமும், உணவுக்காக ஏற்றப்
பட்ட அடுப்பும் இன்றளவும் அணையாமல் காத்து நிற்கிறது.
ஒரு அறைக்குள் போன அவர் மீண்டும் வெளியே வரவே இல்லை.
அவர் விட்டுச் சென்ற போதனைகள் பல
இடங்களில் சுடர்விட்டு பிரகாசித்து கொண்டிருக்கிறது.
அருட்பெருஞ்ஜோதி! தனிப்பெரும் கருணை!



கவிஞர் கிருஷ்ணவேணி. ஆ,ஊத்தங்கரை

# சோகம்

எண்ணம் பல நிஜமாக
வண்ணமதில் எத்தனையோ
நெஞ்சத்துணிதலில்
இன்னும்பல

கட்டுப்பாடும்
வரையறையும்
பூசிக்கொள்ளத்தெரியாத
சோகத்திற்கு மட்டும் எத்தனை
ஆறுதல் இங்கு.

மெல்லவிழுங்குதலின்
வலிகள் சோகத்தில் மட்டுமே
நடக்கக்கூடும்.
நிஜத்தில் நினைவுகளின் வலி.
சொல்லுக்கப்பாற்பட்ட
சொற்களின் மொத்தங்களில்
சோகமும் ஒன்று.



அழுகைக்கு முன்
பிறந்து பெயர்வைத்துக்கொண்டு
அழுகைக்கு பிறகும்
வாழ்கிற இதனின் ஆயுள் அதிகம்.

வாழ்கிற வாழ்வு பெருவாழ்வு
வசிக்கிற உலகு புதுஉலகு.

மிச்சங்களுக்கு கிடைக்கிற
மரியாதை
தேவைக்கு தேடுகிற ஆர்வம்
எல்லாமும் இல்லாமல் போகிறதுவே.

எந்த ஆசீர்வாதத்தில்
இந்த சோக பூக்கள்
உயிர் பெற்றது?
வண்ணமதில் பல
எண்ணம் சில மிதக்கிறதுவே.
எந்த ஆலயங்கள்
இந்த பூக்கள் விரும்புகிறதுவோ
வாங்கப்படுமோ
பூத்தே கிடக்குமா?

கவிஞர் கோ.டோன்குமார்

# இதழ்

சுவை நிறைந்த கனிகளை
சுவைக்கும் போது
இதழ்கள் தேனாய் இனிக்கும்
நாவிற்க்கும் சுவை தந்தது அல்லவா.

தாமரை இதழ்களின் முத்துக்கள் போல
பனி படர்ந்து கிடக்கும் மழை நீரைப் போல்
அவள் இதழ்களில் மேல் முத்தம் பதிந்து விடாத
ஏங்கி தவிக்கும் காளையர்கள்

ஏன் பெண்களின் அழகு மட்டும்தான் ருசிக்க படுமே
உலகில் எவ்வளவோ அழகு கெட்டி கிடைக்கிறது
அவற்றெல்லாம் நாம் ருசிக்க கூடாதா.

பழங்களின் சுவை நிறைந்த
பழங்களின் இதழ்களை பிரித்து பார்
அவற்றில் பலவிதமான முத்துக்கள் உள்ளதே.
பெண்ணை மட்டும் ருசிக்க வேண்டுமா.

உறவாடும் பெண்ணிடத்தில் களவாடும்
எண்ணங்களை அழித்து விடு மனமே.
இதழ் மென்மையானது அதில் வன்மை வேண்டாம்

சுவை நிறைந்த கனிகளை
சுவை கொடுக்கும் பெண்ணாக மாற்றிவிடாதே.
சுவை எல்லாவற்றைலும் உள்ளது
நீ நன்றாக புத்தகத்தை படித்து பார்.
அதில் சுவை நிறைந்த வார்த்தைகள் உள்ளது

நல்ல மனிதர்களிடம் பழகிப் பார்.
அவர்களிடம் இருந்து நல்ல எண்ணங்களை தேடு.
அன்பு காட்டும் உயிரனங்களிடம் பழகிப் பார்.

ஏன் பெண்களின் இதழ்கள் தான்
தேனாய் இனிக்குமே மனிதா.
இதழ்கள் வாய்விட்டு பேசுவதற்கு தான்
அவற்றை கொடுத்தான் கடவுள் ருசிக்க அல்ல.



பூக்களின் இதழ்கள் கூட.
அழகாக இருக்கும் அதற்காக
ருசிக்க முடியாது வாசனை முகர்ந்து பார்.
மிகவும் அழகாக இருக்கும்
அதுபோல் தான் பெண்களின் இதழ்களும்

உறவாடுங்கள் அன்பாக.
களவாடும் எண்ணம் வேண்டாம்
ரசித்து பழகுங்கள் ருசித்து பார்க்க வேண்டாம்
அவள் தண்ணீர் மேல் தத்தளிக்கும்
தாமரை இதழ் போல.

நீங்கள் நீந்தி அதை அழிக்க நினைக்கதீர்கள்
பெண் அழகான தாமரை தேவதை
பூத்துக்குலுங்கும் பலவகையான
நிறங்கள் கொண்டவள்
இதழ்கள் வாய்விட்டு பேசுவதற்கு மட்டுமே

இதழ் மென்மையானது அதில் வன்மை வேண்டாம்

கவிஞர் ஏ.கோபி,நத்தம்

# தளிர்

கருநீல வானில் நிலவின் மறைவில்
அந்தி உதிக்க.
ஏதோ ஆகாயத்தில் ஏற்படும்
விந்தை போல பார்வையில்.



நங்கை நனைந்து நீராடி
பொருத்தமாய் பூவாடை உடுத்தி.
பாதச்சுவடை அவனியில் பதிக்க
மோட்சம் செய்த பூவுலகும்
பூத்து குலுங்கினவாம்
பூஞ்சோலையாக.

பொன் பாதத்தின் முதல் அடியை
அம்பலத்தில் படியில் பதிக்க
தளியின் மணிகள் ஒலித்தே
பூங்காற்றும் அவள் தேகம் உரசி சிலிர்க்க.

நீண்ட விழி கேசம் அழகில்
அவளை பிறையாய் சுகிக்க.
அம்பலத்தின் மாடத்தில் விழி பார்வை.

பறக்கும் பட்சிகளின் அழகில்
அவள் நிறைந்திட.
செவியோரம் வீசும் காற்றின்
தீண்டலில் சிமிக்கியின் அசைவோ.
அவளை பேரழகாய்
புதுப்பித்தன பூந்தளிர் மழலையாய்.

ஓரமாய் இரசித்த காதலன்
தளியின் மாடத்தை இரசிக்கும் தளிரே.
என்றுரைத்திட நாணி நலினமாய்
நகைத்தாள் மென் குரலில்.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# ஹைக்கூ

குகைக்குள் இருந்து வெளிவரும் புகைவண்டி.
செட்டை கழற்றும் பாம்பு.

உயிர்கள் வந்து தங்கிச் செல்லும் குடம்மை.
காற்றடைந்த காயம்.

சில மனிதரின் முத்தியின்பம் வந்து சேரும் வழி.
கழிவுத் தண்ணீர் வரும்வழி.

உப்புநீர் குடித்து கறுத்த மஞ்சு உமிழ்ந்து செல்கிறது.
நன்னீரை.

கவலையின் போது காலம் நகர்கிறது மெதுவாக.
கருந்துளைக்குள் சிக்குண்டேன்.

பாலை உறையச் செய்கிறது உயிர் கொல்லா பற்றீரியா.
உறைமோர்.

தாலிகட்டி வேலை செய்து விட்டுச் செல்கிறான் கணவன்.
இல்லறதில் ஒழுக முடியாமல்.

பாழடைந்த வீட்டில் பாடசாலை மாணவர்கள்.
விபச்சார விடுதிகள்.



வீட்டிற்கு வரும் விருந்தாளி விருந்துண்டு செல்கிறான்.
வீட்டு கன்னிகளை.

எழுதிய கவிதை எழுத்துப் பிழையானது
பேசிய வார்த்தை வழக்கொழிந்து போனது.
எனது வரிகள்.

கவிஞர் கோ.தனுசன்,மட்டக்களப்பு, இலங்கை

# வள்ளலார்

சமயக் கலப்பில்லாத
அறங்கள் வேண்டும்.
சாதிகள் இல்லாத
சமுதாயம் வேண்டும்.

வேதிக் கலப்பில்லாத
வேளாண் வேண்டும்
ஆதிமனிதனாக
அறத்துடன் வாழவேண்டும்.

இதயம் மகிழ
இனியது செய்திடல் வேண்டும்.
இறுக்கத்தைக் கொஞ்சம்
குறைத்திட வேண்டும்.

சிறந்த சிந்தனைகளால்
சிறந்திட வேண்டும்.
இன்னா செய்தாருக்கும்
இனியதே செய்திட வேண்டும்.

ஒழுக்கத்தை
உயிரென எண்ணிட வேண்டும்.
அடுத்தவர் முன்னேற்றத்திலே
ஆனந்தம் அடைந்திட வேண்டும்.

உயரிய பண்புகளை
உள்ளத்திலே
வளர்த்திட வேண்டும்



காசில்லாத கல்வி
வேண்டும்.
வீசுதென்றலுடன்
விளையாடிட வேண்டும்.

பொறாமையில்லா
சிந்தை வேண்டும்.
பொறுத்துக் கொள்ளும்
மனமும் வேண்டும்.

குறை சொல்லாத
குணமும் வேண்டும்.
மறைகளில் கூறியபடி
மாண்புடன் வாழ வேண்டும்.

இன்று வள்ளலார் பிறந்த தினம்

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன்,கோவை மாவட்டம்

# இரவின் மடி இனிதே

ஆதவனும் அந்தியில் மறைந்திட
முழுமதியும் முழுதாய் நிறைந்திட

சின்னஞ்சிறு பறவைகளும் ஓய்வெடுக்க
கடல் அலைகளும் சற்றே கண்ணயர

விண்மீன்களும் வலம் வந்திட
தென்றலும் சுகந்தமாய் வருடிட

அதிகாலையில் இருந்து ஓடி உழைத்த உடலுக்கு
ஆதரவாய் சிறிது ஓய்வு தந்திட

கண்ணிமைக்கும் பணியிலிருந்து விடுதலை தந்து
சுகமாய் உறங்க உதவிடும்


இரவின் மடி இனிதே!



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# தியாகி சுப்ரமணிய சிவா

ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து நான்காம்
ஆண்டதனின் அக்டோபர் திங்கள் நான்காம்
நாளன்று, ராஜம் ஐயருக்கும் நாகலட்சுமி அம்மைக்கும்
நன்மகவாய் உதித்தவர்தான் சுப்ரமணிய சிவா!
அரசியலையும் ஆன்மிகத்தையும் இணைத்து நம்நாட்டில்
ஏராளமானோர்க்கு ஏற்படுத்தினார் விடுதலை வேட்கைதனை!
ஞானபானு, இந்திய தேசாந்திரி ,பிரபஞ்ச மித்திரன்,
எனும் பத்திரிகைகளின் ஆசிரியர்! உரிமையாளர்!
நளினசுந்தரி எனும் நாவலை எழுதியவர்!
வீரமுரசு என்றழைக்கப் பட்டவர்! திலகரைத்தம்
குருவாய் ஏற்றவர்! பாரதி, வவுசி, இருவருடனும்
நெருங்கிப் பழகியவர்! அகவை பதினைந்தில்
திருமண வாழ்வு மீனாட்சி அம்மையொடு!
பாரதியின் பாடல்களைத் தெருத்தெருவாய்ப் பாட
பஜனைக் குழுவொன்றை ஏற்படுத்தி அதிலிணைந்தார்!
தர்மபரிபாலன சமாஜந்தனைத் திருவனந்த புரந்தனிலே
தோற்றுவித்து இளைஞர்களுக்கு ஊட்டினார் தேசபக்தியினை!
அரசுக்கு எதிரியென அங்கிருந்து வெளியேற்றம்!
பாரதமாதாவிற்கு ஆலயம் அமைத்திட
பாப்பாரப்பட்டியில் நிலமொன்றை வாங்கினார் நிதிதிரட்டி!
பாரதபுரம் எனப் பெயரிட்டாரே! தேசபந்து
சித்ரஞ்சந்தாஸ் கோயிலுக்கு அடிக்கல் நாட்டினாரே!
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத் தொன்று
பொங்கல்நாள் முதலாய் துறவியுடை தரித்தாரே!
இருமுறை சிறைவாசம்! மூவிரண்டு ஆண்டுகளை
சிறையில் கழித்தவர்! தொழுநோய் வாய்ப்பட்டுத்
தவித்தவரை இரயிலில் பயணிக்க அரசு
தடைபோட்ட பின்னும் கட்டை வண்டியிலும்,
நடைப் பயணம் மேற்கொண்டும் நாட்டுக்கு உழைத்தவர்!
அகவை நாற்பத்தி ஒன்றதனில் மறைந்தாரே!
ஞான தீரரின் தியாகத்தைப் போற்றுவமே!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# விந்தை

வாழ்க்கை ஓட்டம்
அழகாய் நகர்ந்து செல்கிறது
போகிற போக்கில்
மறதி மருந்தாகி விடுகிறது

மனதின் ஓரத்தில் புறப்பட்ட
கேளிக்கை ஒலிகள்
போகிற போக்கில்
நீர்த்து நிசப்தமாகி விடுகிறது

விழிகளில் தெறிக்கும்
தீக்கங்குகள்
போகிற போக்கில்
நிலைமாறி குளிர்ந்து விடுகிறது



நெஞ்சை உலுக்கும்
படபடப்புகள்
போகிற போக்கில்
அமைதியடைந்து விடுகிறது

ஆர்வத்தில் உருவான
தவிப்புகளின் வீச்சு
போகிற போக்கில்
சுருங்கி சுருண்டு விடுகிறது

விரக்தியில் விரிக்கப்பட்ட
நூலிழைகள்
போகிற போக்கில்
புறந்தள்ளப்பட்டு விடுகிறது

நித்தம் நித்தம் வானளந்த
ஆசை மேகங்கள்
போகிற போக்கில்
பரவி கலைந்து விடுகிறது

வாழ்க்கை ஓட்டம்
அழகாய் நகர்ந்து செல்கிறது
போகிற போக்கில்
மறதி மருந்தாகி விடுகிறது

கவிஞர் இளங்கோவன் மணியன்

# ஹைக்கூ

இரவு நேரம்
சத்தம் கேட்கிறது
ஆட்காட்டி பறவை



கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# மாலவனும் வைணவமும் – பகுதி(4)

வைணவத்தின் இருபிரிவு வடகலையும் தென்கலையே!
வடகலைக்கு சமக்கிருதமும் வேதங்கள் அடிப்படையே!
நிர்மாணம் வேதாந்த தேசிகரே! நாரணனை
அடைதற்கு எளியவழி அர்ச்சாவதா ரவழிபாடே!
பெரியதொரு திருவடியாம் கருடாழ்வார் சிறியதொரு
திருவடிப்பேர் அனுமானும் ஆச்சாரியர் வழிபடற்குத்
தக்கவராம்! முதன்மையாம் ஆச்சாரியர் ஸ்ரீநாதர்!
தொடர்ந்தவர்கள் ராமானுஜர் பிள்ளைலோ காசாரியும்
வேதாந்த தேசிகரொடு மணவாள மாமுனிகள்
என்றமைவர்! தென்கலையின் நிர்மாணம் பிள்ளைலோ
காசாரியர்! இப்பிரிவில் தமிழுக்கு முதன்மையும்
நாலாயிரத் திவ்வியமாம் பிரபந்தம் பயில்நூலே!
இந்நூலின் பெயர்ப்புகளோ இன்றளவும் சமக்கிருதம்
தெலுங்கதனில் கன்னடத்தே ஒரியாவில்! இசைப்பாடல்
வகையிதுவே! தென்கலையின் ஆச்சார்யப் பரம்பரையோ:
நாதமுனி உய்யக்கொண் டார்மணக்கால் நம்பிஎம்பார்
ஆளவந்தார் ராமானுஜர் நஞ்சீயர் நம்பிள்ளை
பெரியவாச்சான் ஈயுண்ணி நல்மாதவப் பெருமாளும்
பிள்ளைப்பெரு மாள்நாயன் பட்டரெனப் பற்பலரே!
பாஞ்சராத்ர ஆகமத்தே மூன்றுநிலைக் கோட்பாடு
கொண்டதுவே! தத்துவமும் ஹிதமதுவும் புருஷார்த்தம்
என்பதுவாம்! முக்தியெனும் மோட்சத்தின் வகைகளாக
நான்குரைப்பர்! சாலோக்யம் சாயுச்சியம் சாமீப்யம்
சாரூப்யம் என்பனவாம்! எட்டெழுத்து மந்திரமே
வைணவர்க்கு வீடுபேறு அருள்வதுவே! ஆழ்வார்கள்
சென்றுகண்டு பாட்டாலே போற்றிட்ட தலம்பலவும்
சேவித்தே பிறந்தபயன் எய்துவமே! தாயாரின்
நற்பரிவும் பெருமாளின் அனுக்ரஹமும் நண்ணுவதால்
உய்ந்திடுவோம்! அன்னவர்க்கு சரண்புக்கு மன்னுவமே! ...தொடரும்



**கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)**

# வேதனை காலம்

காலம் பாகுபட்டது காட்சிகளும் மாறுபட்டது
கண்ணீர் துன்பங்கள் பின்னணி இல்லாமல் .
நெடுந்தூரம் வழி தெரியாமல் துரத்திக் கொண்டே
ஒவ்வொரு வாழ்க்கையிலும் மாறுபட்ட
பல வலிகளில் அடிபட்டு அடிபட்டு குருதி
சிந்தி சிந்தி மாறாத வடுவாய் காயங்கள்
காலத்தையும் வெறுக்கிறது நேரத்தையும் வெறுக்கிறது
சிந்தனை செயலிழந்து, உடல் பலம் இழந்து
வறுமையும் சாட்சி இல்லாமல் நீதி இழந்து
நிம்மதி கட்டளை இட்டு நம்பியவரின் நயம்
வேஷத்தின் உச்சத்தில் தினம் தினம் வேடிக்கை காட்டிக் கொண்டு
ஒரு தனி மனிதன் மனநிலையை இச்சூல்
நிலை சமூகத்தின் விளிம்பின் மிருகத்தன்மையை
மனதில் கொண்டு ஒவ்வொரு மனிதனையும் சுயநலமாகவும்
அவனை மிருகத்தனமாகவும் வழி நடத்துகிறது சமூகம்
வேதனை காலம் உச்சம் ஒரு நாள் மாறுபட்டு
நீதியில்லா சமூகம் ஒரு நாள் நீதியின்றி தவிக்கும்
அத்திருநாள், வெற்றியின் வாகை.



கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# உன்னை நம்பு

யாரும் யாருக்கும் குறைந்தவர்கள் இல்லை
பிறர் சொல்வதை பெரிதாய் எண்ணாதே!
ஏளனம் பேச்சிற்கு செவிசாய்த்து
நீ செல்லும் பாதையை மறக்காதே!
அவமானம் உன்னை அற்புதமாக்கும்
தோல்வி உன்னை முயற்சியை நாடவைக்கும்!
அந்த முயற்சியே உனக்கான சாவி!
உன்னை நம்பு வாழ்வில் உயர்வாய்!



கவிஞர் க.பூமணி,சென்னை

# உன் நினைவால்

கிட்டத்தட்ட பத்து வருடங்கள்.

வரும் போது, அப்படியே தடவிப் பார்த்தேன்.என்னவோ அதன் மேல் அன்பும்
கனமும் குறைந்ததேயில்லை.
அன்றைக்கு குறைவான சம்பளத்தில் வாங்கிய முதல் சுகந்தம் அதனிடத்தில்
எப்போதும் அன்பு குறைந்ததே இல்லை.

நானும், என் நண்பனும் அந்த முகவரை சுற்றி சுற்றி வந்து, கடைசியில் இது பிடித்தது.
எனக்கு எப்போதும் கறுப்பின் மீது அதீத ஈர்ப்பு. அதனால் தான் வண்டியும் கறுப்பானது.

முதன் முதலில் வண்டி ஓட்டத் தெரியாதவன் வண்டி வாங்கினால் எப்படியிருக்கும்? அப்படித்தான் என் கூத்தும்.
சிறு வயதிலே டயர் , டியூப் மட்டுமே அறிந்தவன். எங்கள் ஊர்களில் நான் ஒர்க்ஷாப்பே பார்த்தேயில்லை.

அதிகமாய் சைக்கிளுக்கு பஞ்சர் ஒட்டும் கடைகள் தான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் இருப்பார்கள்.... இப்போது மேலோகம் சென்றிருப்பார்கள்.
அதுவும் ஒரு காலம். ஊரில் முதன் முதலில் பார்த்த வண்டி சுபேகா. பல பேர் அதன் மண்டையையும் தலையையும் பார்த்தது உற்சவமாய் தான் இருந்தது.

இப்போது அந்த மனிதர் இறந்து இரு வருடங்களை கடந்து விட்டது.
இப்போதெல்லாம் வருடங்கள் மிக பெரிய யூகங்களை கடத்தி செல்கிறது என்பது யூகமே.

சரி பத்து வருடம்.
நாற்பது வயதில் வண்டி மேல் இருந்து அதீதமாய் எனக்குள் சிரிக்கிறேன்.
இப்போதும் எனக்குள் அந்த சிரிப்பு ஓடிக் கொண்டிருக்கின்றது.

இராஜேஷ் சங்கரப்பிள்ளை

# உன் நினைவால்

கிட்டதட்ட உள்ளார்த்த காதலி போல தான்.
வாங்கி மூன்றாம் நாளிலே அதன் மண்டையில் இடித்து விட்டேன், ஆனால்
அது கதறவில்லை...
நான் கதறினேன். மூன்று நாட்கள் தூங்க வில்லை.

சந்தைக்கு போதல், மருத்துவ மனைக்கு போதல்.... மனைவியை அழைத்து வரல். கலியாண வீட்டுக்கு போதல். இலக்கிய கூட்டத்திற்கு போய் வரல். எப்போதும்
கோபப்பட்டதோ சஞ்சல ப்பட்டதோ இல்லை.

ஒரு நாள், பத்தாம் வகுப்பு இறுதி தேர்வு தேர்வு ப் பணியில் அதை பிளேடால் கூராக்கினார்கள் மாணவர்கள். அவர்கள்
என்னச் செய்வார்கள் அவர்கள் கோபம் அவர்களுக்கு, என் மேல் காட்ட முடியவில்லை அதன் மேல் காட்டி விட்டார்கள். பின் அதற்கு ஒரு சட்டை போட்டேன்.

கொரானா காலம் ... நான்கு வருடங்களாய் அதன் ஊடே பயணித்தேன். மூன்று தடைவைகள் அது விழுந்தது. என்னை காயப்படுத்தவில்லை.

மனைவியின்
வலி
மகளின் காயம்
மகனின் உரசல்
எல்லாவற்றிலும்
இணையாய்....

இப்போது
அதற்கும்
எனக்கும்
போதாத காலம்...

ஓய்வெடுக்க விட்டுக்கின்றேன்.



ஆனாலும்
என் மனம்
தடவித்தான் பார்க்கின்றேன்.

ஆம்...
எப்பொழுதும்
காதலி ஆழகானவள்.

அதனால்
தினமும்
மனதால் தடவிக் கொள்கிறேன்.

இப்பொழுதும் உன் நினைவால்,
'Scooty'

இராஜேஷ் சங்கரப்பிள்ளை

# வாழ்க்கை என்னும் கவிதை

## அத்தியாயம். 5 — ஏன் மௌனமாகிட்டீங்க?


"யாரு? புவனாவா…… வா… வா. உட்கார்"
"வீட்டிலே யாரும் இருக்காங்களா?"
"எல்லோரும் வெளியே போயிருக்காங்க"
"உங்க குழந்தை திவ்யா?"
"அம்மா கூட கோயிலுக்குப் போயிருக்கா"
"உங்களுக்கு விஷயம் தெரியுமா?"
"என்ன விஷயம்?"
"தெரிந்து வைத்துக்கொண்டுதான் தெரியாத மாதிரி என்ன விஷயம் என்று கேட்கிறீர்களா?"
"……………."
"ஏன் மௌனமாகிட்டீங்க?"
"கேள்வியும் நீயே கேட்டுக்கொண்டு பதிலும் நீயே சொன்னால் நான் என்ன பேசட்டும்?"
"சரி நேரடியாக விஷயத்திற்கு வருகிறேன்"
"சொல்லு"
"என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள உங்களுக்கு விருப்பம்தானே?"
"ஏன் அப்படிக் கேட்கிறாய்?"
"இரண்டாம் தாரமாகத்தானே கட்டிக்கப் போகிறேன். இது போதும்னு யாராவது உங்களை யாராவது கட்டாயப்படுத்தினார்களா?"
"நான் திருப்பிச் சில கேள்விகள் கேட்பது உங்களுக்கு சங்கடமாக இருக்கா?
"எல்லாம் தெரிஞ்சுகிட்டுத்தானே சம்மதிச்சே?"
"அதனாலே தானே கேட்டேன். என்னைக் கல்யாணம் பண்ண உங்களுக்கு விருப்பமா என்று?"
"எனக்கு முழு சம்மதம். ஆனால், இரண்டாம் தாரம் என்பது…"
"அத்தான் உங்களுக்கு விருப்பம் எனும் போது நான் கொடுத்து வச்சிருக்கேன்னுதான் அர்த்தம்"
"புவனா இதைப் பற்றி உன்னிடம் தனியாகப் பேச வேண்டுமென்று நினைத்திருந்தேன். கும்பிட போன சாமி குறுக்கே வந்தாப்பல நீயே வந்து விட்டாய்"
"நானும் கூட உங்களிடம் முதலில் பேச வேண்டும், உங்கள் மனதைத் தெரிந்து கொண்ட பிறகு தான் மேலே மனதைத் திறந்து விருப்பம் சொல்ல வேண்டும் என நினைத்துக் கொண்டிருந்தேன்."
"திரும்ப கொஞ்சம் யோசித்துப் பார்"

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

**அத்தியாயம். 5** **ஏன் மௌனமாகிட்டீங்க?**

"என்னைக் கல்யாணம் செய்து கொள்வதில் உங்களுக்கு விருப்பம் என்று சொன்ன பிறகு வேறு பிரச்சினையேயில்லை."
புவனா இப்போது சரியென்று சொல்லி விட்டு நாளைக்கு ஐயோ ஏன் இவனுக்கு இவரைக் கல்யாணம் செய்து கொண்டு ஏன் இந்தச் சின்னக் குழந்தையோடு அல்லாட வேண்டும் என நீ நினைக்கக் கூடாது."
"கண்டிப்பாக அப்படி ஒரு நிமிசம் கூட நினைப்பு வராது. அதை நான் மகிழ்வாக, ஏன் விரும்பியதாகவே எடுத்துக்கொள்ளலாமே"
ஏன்? வேறு யாரையாவது கல்யாணம் பண்ணிக்கொள்ளலாம் என்ற எண்ணம் உள்ளதா?"
"சீ...சீ..."
"அப்படியானால் என்னைப் பிடிக்க வில்லையா?"
"அப்படியெல்லாம் இல்லை புவனா. எனக்கு உன்னை மிகவும் பிடித்திருப்பதால் தான் ஒரு இளைஞனைக் கட்டிக்கொண்டு சுகமாக இரு என்கிறேன்."




"ஏன் நீங்கள் கிழவராகி விட்டீர்களா?"
"அப்படியில்லை பெண்ணே. நீ எனக்குத் திருமணமான மறு நிமிடம் இங்கே என் பெண்ணின் தாயாக நீ மாற்றிக் கொள்ள வேண்டிய கஷ்டம் ஏன் எதற்கு தான் உனக்கு?"
"சிவா அத்தானுக்காக நான் திவ்யாவின் அம்மாவாகிறதிலே எந்தப் பிரச்சினையுமில்லை."
உள்ளே ஓடிவந்த திவ்யா "ஹாய், அத்தா எப்ப வந்தே" மடியில் ஏறி புவனாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டாள்.
கோகுலம்மாள் பிரசாதம் எடுத்துக் கொடுத்து விட்டு "எப்படியிருக்கே புவனா, சௌக்கியம்தானே?" என்றாள்.
"ஆமாம்" என்று தலையாட்டினாள் வெட்கத்தோடு.
"பாரு இப்பவே அண்ணிக்கு வெட்கம் வந்து விட்டது." என்றான் சிவாவின் தம்பி
"........." சிரித்துக் கொண்டே ஓடினாள் புவனா.

**...தொடரும்**

**இரஜகை நிலவன்**

# அகத்தியர்

## கட்டுரை




அகத்தியர், தமிழினத்தில் முன் தோன்றிய மூத்தக் குடியினர் ஆவர். குறுமுனி என்றும் தமிழ் முனி என்றும் போற்றப்பட்டார்.

அகத்தியர் எழுதிய நூல் அகத்தியம் என்ற சிறப்பு நூல் - ஆகும். முதல் தமிழ் இலக்கண நூல் என்ற பெருமை பெற்றதும் 'அகத்தியம்' தான்

'எழுத்து சொல் - பொருள் - யாப்பு - அணி' - எனும் ஐந்திரப் பாகுபாடுகளைக் கொண்டதுதான் இந்த தமிழ் இலக்கண நூல் ஆகும்.

உலக மொழிகளில் இல்லாத இலக்கணச் சிறப்பு பெற்றதுமான இந்த அகத்தியம் - தொல் காப்பியத்துக்கே மூல நூல் ஆகும். அகத்தியத்தில் சிற்றகத்தியம் - என்றும் பேரகத்தியம் என்றும்

இரு பிரிவுகள் உண்டு. பேரகத்தியத்தில் (12,000) பன்னிரெண்டாயிரம் சூத்திரங்கள் உண்டு. சிற்றகத்தியம் என்பது பேரகத்தியத்தின் சுருக்கமே ஆகும்.

அகத்தியருக்கு வரலாறு கிடைக்கவில்லை. ஐந்திரப் பாகுபாடுகளேயன்றி 12,000 சூத்திரங்களில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, சந்தம், வழக்கியல், அரசியல், அமைச்சியல், பார்ப்பன இயல், சோதிடம், கந்தருவம், கூத்து என்பனவும் இன்னும் பிறவும் - இடம்பெற்றுள்ளன என்பர்.

இந்நூல் பற்றி உரையாசிரியர்கள் கையாண்ட சிலநூற்பாக்கள் மட்டுமே கிடைத்துள்ளனவே, தவிர அகத்தியம் நூல் நமக்குக் கிடைக்கவில்லை.

இவ்வரிய இலக்கணநூலின் ஆசிரியரான அகத்தியர். கடவுளுக்கு நிகராக இசைக்கொண்டு விளங்கியவர் ஆவார்.

அ வில்சன்,இதழாசிரியர்

# அகத்தியர்

## கட்டுரை

அகத்தியரின் சீடர்கள் 1. அதங்கோட்டாசான், 2. துராலிங்கர், 3.செம்பூட்சேய், 4. வையாபிகள், 5. வாய்ப்பியன், 6. பனம்பாரனார், 7. கழாரம்பர். 8. அவிநயர். 9. காக்கைப்பாடினி, 10. நத்தத்தனார். 11.வாமனர். 12. தொல்காப்பியர் எனும் பன்னிருவர் என்பர். அவர்கள் இயற்றிய நூல் பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை, எனப் பாயிரங்கள் கூறுவதைக் காண்கிறோம். அகத்தியருக்கு தொல்காப்பியரே தலைமாணாக்கர் என்றும் கூறுவர்.

அகத்தியம் எனும் நூல் முச்சங்கங்களால் அரங்கேறியதாகவும், ஆனால் தொல்காப்பியம் - இடை, கடை இரு சங்கங்களில் விளங்கியதாக அகப்பொருள் உரை கூறுகிறது.

அகத்தியரின் வாழ்க்கை வரலாறு நமக்குக் கிடைக்கவில்லை என்பதும் ஒருபுறம் இருப்பினும் 'அகத்தியர்' என்ற பெயரில் புராணக்காலத்திலும், பழந்தமிழ்ச்சங்கக் காலத்திலும் முனிவர்கள் புலவர்கள் - மருத்துவர்கள் சோதிடர்கள் எனபலர் இருந்தனர்.

அதுமட்டுமல்ல, அட்டமாசித்தி பெற்ற பதினெண் சித்தர்களில் ஒருவர் அகத்தியர் என்றிருந்தார். அவர்தான் சித்த மருத்துவ முறையை வகுத்தவர்களின் தலையாயவர் எனவும், ஆயுர்வேத சூத்திரங்களுக்கு விரிவுரை எழுதியிருக்கிறார் எனவும் கூறுவர்.



மகத்துவம் பொருந்திய அகத்திய முனிவர்

நன்றி : தமிழ் வளர்த்த தமிழ்த்தொண்டர்கள், கவிமாமணி அறிவுச்சுடர்.

அ வில்சன்,இதழாசிரியர்


அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
நிதானம் தவறும் போதெல்லாம்
ஒன்றைமட்டும் நினைவில் கொள்ளுங்கள்
வார்த்தைகள் கூர்மையானது
நம்மை எப்போதும் சிதைக்கக் கூடும்
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:
9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com